### உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக் கொண்டிருக்கிறது –

# பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை உருவாக்கி உலகை வெல்லுங்கள்!

### தூத்துக்குடியில் நடைபெற்ற தேசிய ஸ்டார்ட் அப் மாநாடு – 2026–இல்

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தூத்துக்குடி, ஆக.22-

உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகளை உருவாக்கி உலகை வெல்லுங்கள் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. கூறினார்.

தூத்துக்குடியில் *All India Chamber of Commerce and Industries* சார்பில் நடைபெறும் *National Startup Summit* 2026 மாநாட்டின் துவக்கவிழாவில் கலந்துகொண்டு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி ஆற்றிய உரை வருமாறு:

தேசிய ஸ்டார்ட் அப் மாநாடு 2026 வந்திருக்கக்கூடிய அத்தனை இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். இன்றைய தொழில்நுட்பம் எங்களை போன்றவர்களுக்கு புரியாத ஒன்று, அனால் உங்களுக்கு புரியும். ஏஐ (AI) போன்ற தொழில்நுட்பம் பல விஷயங்களை இன்றைக்கு மாற்றியமைக்க திறன் உள்ள காலகட்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.

தொழில்நுட்ப நிறுவனங்கள் முக்கியம் என்று நினைத்த காலக்கட்டம் சென்று, ஏஐ(AI) அந்நிறுவனங்களில் வேலை பார்க்கக்கூடியவர்களை மிக எளிதில் அவர்களை மாற்றக்கூடிய சூழல் உள்ளது. இதனால் எத்தனை பேருக்கு வேலை இருக்கும், அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற பல கேள்விகள் தோன்றுகிறது, பல நாடுகள் இந்த இக்கட்டான சூழ்நிலையை எவ்வாறு கையாள்வது என்று நினைக்கக்கூடிய காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நம்மைச் சுற்றி நிறைய விஷயங்கள் இருக்கின்றன. சில விஷயங்களை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம்; சிலவற்றை விளையாட்டாகப் பேசிக்கொள்கிறோம். உதாரணமாக, இங்கே விளக்கேற்றும் போது, எந்தச் சூழலிலும் எளிதாக ஏற்றக்கூடிய ஒரு விளக்கையோ, ஒரு திரியையோ யாராவது கண்டுபிடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கலாம். பல நேரங்களில், விளக்கேற்றுவது மகிழ்ச்சியைத் தரும் ஒரு விஷயமாக இருந்தாலும், அதைச் செய்வதே சில சூழ்நிலைகளில் ஒரு சவாலாக மாறிவிடுகிறது.

**இன்று உலகமே புதிய தீர்வுகளை தேடிக்கொண்டிருக்கிறது!**

இது ஒரு சிறிய விஷயம்தான். ஆனால், இது போன்ற நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எண்ணற்ற சிறிய சவால்கள் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. இன்று உலகமே புதிய புதிய தீர்வுகளைத் தேடிக்கொண்டிருக்கிறது.





அந்தத் தீர்வுகளை உருவாக்கப் போகிறவர்கள் நீங்கள்தான்.இன்றைக்கு தீர்வுகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்களாகவும், நாளைக்கு உலகத்தின் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை உருவாக்கப் போகிறவர்களாகவும் நீங்கள் இருக்கிறீர்கள்.ஸ்டார்ட்அப் என்பது வெறும் ஒரு நிறுவனத்தைத் தொடங்குவது அல்ல.மக்கள் சந்திக்கும் ஒரு பிரச்சினையை அடையாளம் கண்டு, அதற்கு ஒரு புதிய, பயனுள்ள தீர்வை உருவாக்குவதுதான் ஒரு ஸ்டார்ட்அப்.

முதலில், உங்கள் முன்னால் இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால் என்னவென்றால், எல்லோரும் பேசத் தொடங்குவதற்கு முன்பாகவே, அது என்ன பிரச்சினை என்பதை அடையாளம் கண்டு, அதற்கான ஒரு தீர்வுடன் வருவதுதான். அதுதான் உங்களுக்கு முதலில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால் என்று நான் நினைக்கிறேன். மேலும், உங்களில் பெரும்பாலானவர்கள் அதை ஏற்கனவே செய்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

*LinkedIn*ன் இணை நிறுவுநரான ரீட் ஹாஃப்மேன் ஒரு இடத்தில் இப்படிச் சொல்கிறார்: ஸ்டார்ட்அப் என்பது ஒரு உயரமான இடத்திலிருந்து கீழே குதிப்பது போன்றது. கீழே விழுந்துகொண்டிருக்கும்போதே, ஒரு விமானத்தின் பாகங்களை ஒன்றாகச் சேர்த்து அந்த விமானத்தை உருவாக்க முயற்சிப்பது போன்றதுதான் ஸ்டார்ட்அப்.

**துணிந்து முதல் அடியை எடுத்து வையுங்கள்!**

ஸ்டார்ட்அப்கள் என்பவை இப்படித்தான், நீங்கள் களத்தில் இறங்க வேண்டும்; துணிந்து முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் உருவாக்கிய தீர்வு குறித்து உங்களுக்கே கொஞ்சம் தயக்கமோ, இது இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருந்திருக்கலாம் என்ற எண்ணமோ இல்லையென்றால், நீங்கள் ஏற்கனவே கொஞ்சம் தாமதமாகிவிட்டீர்கள்.

ஸ்டார்ட்அப் என்றால், எல்லாவற்றையும் முழுமையாகத் தயாரித்துவிட்டு தொடங்குவது அல்ல. பிரச்சினையை முதலில் அடையாளம் கண்டு, அதற்கான தீர்வை உருவாக்கி, அதை நடைமுறையில் கொண்டு வந்து, அதன் வழியில் தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டே செல்வது தான் ஸ்டார்ட்அப்.

மற்றவர்கள் யோசிப்பதற்கு முன்பே, நீங்கள் ஒரு வாய்ப்பை அடையாளம் கண்டு, அதற்கான தீர்வை ஆராய்ந்து, அதைப்பற்றி யாருமே பேசாத ஒரு விஷயமாக இருந்தாலும், நான் இதைப் பற்றி பேசலாமா? இதை எடுத்துக் கொண்டு போகலாமா? என்றெல்லாம் யோசிக்காமல், இதற்கு நான் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பேன் என்று தீர்வைக் கொண்டு வருவதுதான் இன்று ஸ்டார்ட்அப்களுக்கு மிக முக்கியமான ஒரு தேவையாக இருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு விஷயத்தைப் பற்றி ஜோசப் பேசும்பொழுது குறிப்பிட்டார். நாங்கள் தூத்துக்குடியில் புத்தொழில் களம் என்று தொடங்கியபோது, சமூகப் பொறுப்புடன் செயல்படும் ஸ்டார்ட்அப்களைத் தேடிக்கொண்டிருந்தோம். அதில்தான், அவரும், அதில் வெற்றி பெற்ற இன்னொரு சகோதரியும் இங்கே இருக்கிறார்கள். இந்த இருவரும் புத்தொழில் களம் நிகழ்ச்சியில் பரிசு பெற்று இங்கே இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

**வெற்றிக்கான அடிப்படைக் காரணம்!**

அவர்கள் இருவரும், உலகம் இதுவரை அடையாளம் காணாத அல்லது அதைப் பற்றி கவலைப் படாமல் இருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை உருவாக்கி வந்தார்கள். எனவே,அவர்களுடைய வெற்றிக்கான அடிப்படைக் காரணமும் அது தான் என்று நான் நினைக்கிறேன். எனவே, நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். உங்களைச் சுற்றியுள்ள விஷயங்களைப் பற்றி சிந்திக்க முயற்சி செய்யுங்கள், சிந்தியுங்கள். செயற்கை நுண்ணறிவால் (AI) ,அரசாங்கத்தால் தீர்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. மிகப்பெரிய நிறுவனங்கள்கூட அவற்றைப் பற்றி சிந்திப்பதற்குக்கூட நேரம் ஒதுக்க முடியாத பல விஷயங்கள் இருக்கின்றன.

ஸ்டார்ட்அப்பின் மிகச்சிறந்த விஷயங்களில் ஒன்று என்னவென்றால், சிறிய குழுவைச் சேர்ந்த மக்களின் தேவையைக் கூட கவனித்து, அவர்களுக்கான தீர்வை உருவாக்க முடியும். ஆனால், மிகப்பெரிய நிறுவனங்களால் அப்படிச் செய்ய முடியாது. ஏனென்றால், ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்களுக்காக மட்டும் செயல்படுவது அவர்களுக்கு நடைமுறையில் சாத்தியமில்லை. அதனால், யாருக்கு அந்தத் தேவை இருக்கிறது என்பதை நீங்கள் அடையாளம் கண்டு, அவர்களை நேரடியாக அணுகி, அவர்களுக்குத் தேவையான தீர்வை உங்களால் வழங்க முடியும். மிகப்பெரிய நிறுவனங்கள் அந்த மக்களைப் பற்றி கவனம் செலுத்தாமல் இருக்கலாம்.

நீங்கள் பேசிய எல்லாரும் சொன்னது போல, எங்களால் முடியும் என்கிற நம்பிக்கையும், நான் ஒருபோதும் கைவிட மாட்டேன், என்னை யாராலும் கைவிடச் செய்ய முடியாது என்கிற மனப்பான்மையும் மட்டும் தான் உங்களுடைய மனதில் எப்பொழுதும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அந்த நம்பிக்கையையும், மனப்பான்மையையும் நீங்கள் சுமந்து, அதை முன்னெடுத்துச் சென்றீர்கள் என்றால், நிச்சயமாக வெற்றி மட்டும்தான் உங்களோடு வரக்கூடிய ஒன்றாக இருக்கும்.

அதே நேரத்தில், குமரவேல் பேசும்போது, அறம் செய்ய விரும்பு என்பதிலிருந்து பொருள் செய்ய விரும்பு என்று ஔவையார் சொல்லியிருப்பதாகச் சொன்னார். நான் சொல்கிறேன், அவர்களுக்கு வேண்டுமானால் பொருள் செய்ய விரும்பு என்பதாக இருக்கட்டும்; இங்கே மேடையில் இருப்பவர்கள் எல்லாம் "அறம் செய்துகொண்டே இருக்கட்டும். ஏனென்றால், அதனுடைய ஒரு பகுதிதான், புதியவர்கள் இங்கே நிறுவனங்களுக்கு வர வேண்டும்,சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு,நம்முடைய சேம்பர் ஆஃப் காமர்ஸ் இதை முன்னெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னேறிச் செல்லுங்கள். உலகை வெல்லுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

---

### "நந்தன் கால்வாய் திட்டத்திற்கு" – கடந்த

## கழக அரசில்தான் அரசாணை வெளியிட்டு - நிதி ஒதுக்கினோம்!

### சட்டப் பேரவையில் – கழகக் கொறடா எ.வ.வேலு ஆதாரங்களுடன் விளக்கம்!



சென்னை, ஆக. 22-

சட்டப் பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய கழகக் கொறடா எ.வ.வேலு அவர்கள், "நந்தன் கால்வாய் திட்டத்திற்கு, கடந்த கழக அரசில்தான் அரசாணை வெளியிடப்பட்டு, நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது" என, ஆதாரங்களுடன் விரிவான விளக்கமளித்தார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

நந்தன் கால்வாய் திட்டத்திற்காக முதல்முதலாக முயற்சி எடுத்தவர் அண்ணன் ஏ. கோவிந்தசாமி தான். அதுதான் உண்மையும்கூட.

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், அண்ணன் கலைஞர் அவர்களுடன் அப்போதைய அமைச்சரவையில் வேளாண் துறை அமைச்சராக இருந்தார். நீண்ட நெடிய காலமாக அது வேண்டுமென்று கேட்டகப்பட்டதுண்டு. சொன்னதைப்போல, தூர்வாரு வதற்காகக்கூட ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்; அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால் சாத்தனூரினுடைய உபரி நீர், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 11 ஏரிகளை நிரப்பி விவசாயத்திற்குப் பயன்படுத்துவது; அதற்குப்பிறகு விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரடியாக வருவது தான் அந்தத் திட்டத்தினுடைய நோக்கம். ஆனால், அதனைச் செய்யவில்லை. கடைசி நேரத்தில், அதாவது குறிப்பாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் முதலமைச்சர் பலமுறை சொல்லி, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா அவர்களை, நானே அழைத்துப் பேசினேன். ஏற்கெனவே, விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நடைபெற்றபோது நாம் ஒரு வாக்குறுதியை கொடுத்திருக்கிறோம். அதனால் அதை கட்டாயம் செய்ய வேண்டும் என்று சொல்லி, அதற்காக நில எடுப்பு செய்ய வேண்டுமென்று, கால்வாய் வெட்ட வேண்டும் என்றால் நில எடுப்பு செய்ய வேண்டும் அல்லவா! அரசாங்கத்தில் *record* இருக்கிறது அல்லவா! அதனால் நிலம் எடுப்பதற்காக எங்களுடைய ஆட்சியில் G.O. வெளியிடப்பட்டு நிதி ஒதுக்கினோம். அதைத்தான் உறுப்பினர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### ஈரோடு மாவட்டத்தில் 148 மாற்றுத்திறனாளிகளுக்கு

## ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள்!

### கே.இ.பிரகாஷ் எம்.பி. கோரிக்கையை ஏற்று ALIMCO நடவடிக்கை!



ஈரோடு, ஆக.22-

ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவி உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் ALIMCO (*Artificial Limbs Manufacturing Corporation of India*) நிறுவனத்திற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, ALIMCO நிறுவனம் மாவட்ட நிர்வாகத்தின் ஆதரவுடனும் ஒருங்கிணைப்புடனும் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மதிப்பீட்டு முகாம்களை நடத்தி, உதவி உபகரணங்கள் தேவைப்படும் மாற்றுத்திறனாளி பயனாளிகளை அடையாளம் காணும் பணியை மேற்கொண்டது.

இந்த மதிப்பீட்டு முகாம்களின் மூலம் 148 தகுதியான மாற்றுத்திறனாளி பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மத்திய அரசின் ADIP (*Assistance to Disabled Persons for Purchase/Fitting of Aids and Appliances*) திட்டத்தின் கீழ் சுமார் ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

பயனாளிகளின் தேவைக்கேற்ப சக்கர நாற்காலிகள், நடை உதவி உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

அடுத்தகட்டமாக, அடையாளம் காணப்பட்ட 148 பயனாளிகளுக்கும் உதவி உபகரணங்களை வழங்குவதற்கான விநியோக முகாமை ஈரோடு மாவட்டத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

"ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவி உபகரணங்கள் இலவசமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக ALIMCO நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று ALIMCO நிறுவனம் மதிப்பீட்டு முகாம்களை நடத்தி 148 பயனாளிகளை அடையாளம் கண்டுள்ளது. தற்போது அவர்களுக்கு ரூ.30.12 லட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இந்த உதவிகள் உரிய பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்வதுடன், ஈரோடு மாவட்டத்தில் தகுதியான அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் அரசு நலத்திட்டங்களின் பயன்கள் கிடைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்" என ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

---

### விஜய் அரசின் இரட்டை வேடம் அம்பலம் – பட்டியல் இன மாணவர்களின் வாழ்வைச் சிதைக்கும் த.வெ.க. அரசு!

## அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்திற்கு மூடு விழாவா?

### தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் - இ.பரந்தாமன் அறிக்கை!



சென்னை, ஆக. 22 -

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் - கழக முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

த.வெ.க. ஆட்சியில் 8 பட்டியலின அமைச்சர்கள் இருந்தும், ஒரு தலித் மாணவர் தன் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர முடியாமல் பரிதவிக்கும் பரிதாபகரமான நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஏழை - எளிய பட்டியல் சமூக மாணவர்கள் அயல்நாடுகள் சென்று உயர் கல்வி பயில பொருளாதாரம் எந்தவிதத்திலும் தடை யாக இருக்க கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு அன்றைய முதலமைச்சர் எங்களின் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டம் தான் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டம்! அந்த திட்டத்தில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி படித்து வரும் மாணவர்களுக்கு நிதியுதவியை வழங்காமல் இழுத்தடித்து வருகிறது த.வெ.க. அரசு.

தகுதிவாய்ந்த SC, ST மாணவர்கள் வெளிநாடு களில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் முதுகலை, பிஎச்.டி மற்றும் முதுமுனைவர் (Post Doctoral) ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் முழு நிதியுதவித் வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர்களின் குடும்ப வருமான அடிப்படையில் கல்விக் கட்டணம், வாழ்க்கைச் செலவினம் உட்பட ஆண்டுக்கு அதிகபட்சமாக 36 லட்சம் வரை முழு நிதியுதவி வழங்கப்படு கிறது.

அதோடு விசா, விமானப் பயணக் கட்டணம், மருத்துவக் காப்பீடு போன்ற இதர செலவு களும் இந்த திட்டத்தில் ஏற்கப்படுகின்றன. வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலத் திட்டமிடும் மாணவர்களுக்கு, விசா மற்றும் தகுதித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் நான் முதல்வன் திட்டம் மூலமாக விலையில்லாமல் வழங்கப்பட்டன.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமை யிலான திராவிட மாடல் ஆட்சியில் எந்த தொய்வும் இல்லாமல் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்த இந்த திட்டம், த.வெ.க. ஆட்சியில் நிதி தாமதத்தால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மலேசியாவில் உள்ள மலேசியதேசியப்பல்கலைக்கழகத்தில் திசுப் பொறியியல் மற்றும் மீளுருவாக்கம் மருத்துவத் துறையில் 2ஆம் ஆண்டு பிஎச்.டி பயிலும் மதுரையைச் சேர்ந்த பாரதிதாசன் என்ற ஆராய்ச்சி மாணவர் நிதி தாமதம் தொடர்பாக வீடியோ வெளியிட்டிருக்கிறார்.

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் 2023ல் மலேசியா சென்ற பாரதிதாசன் முதலாம் ஆண்டிற்கான (2024) கட்டணங்களை அரசு வழங்கியதாகவும் ஆனால், இரண்டாம் ஆண்டிற்கான (2025 - 2026) கல்விக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவிற்கான நிதி வரவில்லை என சொல்லியிருக்கிறார். கடந்த ஏப்ரல் மாதம் வர வேண்டிய நிதி 5 மாதங்களாக வரவில்லை என்று வேதனை தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக பாரதிதாசன் அமைச்சருக்கும், செயலாளருக்கும் 12 முறை மின்னஞ்சல்கள் அனுப்பியும் அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நிதி கிடைக்காததால் மருத்துவ ஆராய்ச்சி பாதிக்கப்பட்டு நண்பர்களிடம் கடன் வாங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மின்னஞ்சல் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காத அரசு, பாரதிதாசன் வெளியிட்டிருக்கும் வீடியோ வைரல் ஆன நிலையில் தவறை மறைக்க, அவர் செலவின ஆவணங்களை முறைப்படி சமர்ப்பிக்கவில்லை எனப் பொய்யான காரணங்களை இப்போது முன் வைக்கிறது.

இது தொடர்பாக இத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் வன்னி அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கை த.வெ.க. அரசின் தவறை மறைக்கும் முயற்சியாகவே தெரிகிறது. அமைச்சர் வெளியிட்ட அறிக்கையிலே பாரதி தாசனுக்கு நிதி வழங்கப்பட்ட தேதிகளை குறிப்பிட்டிருக்கிறார். அந்த தேதிகள் அத்தனையும் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டவை. அவரே உண்மையை போட்டு உடைத்துவிட்டார். தி.மு.க. ஆட்சியில் நிதியுதவி கிடைத்த மாணவனுக்கு த.வெ.க. ஆட்சியில் கிடைக்காமல் போனது ஏன்?

பாரதிதாசன் ஏப்ரல் மாதமே ஆவணங்களை அனுப்பியிருக்கிறார். மின்னஞ்சல் மூலமும் நினைவூட்டியிருக்கிறார். அவருடைய பெற்றோர் அமைச்சரை நேரிலும் சந்தித்து சொல்லியிருக்கிறார்கள். இவை எதன் மீதும் நடவடிக்கை இல்லை என்பதால் தான் மன உளைச்சலில் பாரதிதாசன் வீடியோ வெளியிட்டார். அவர் தேதி வாரியாக அரசிடம் முன் வைத்த கோரிக்கையையும் ரசீது ஆவணங்களையும் வெளியிட்டுள்ள நிலையில் த.வெ.க. அரசு தனது முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக்கொள்ளப் போகிறது?

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கமான விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த வன்னி அரசு பொறுப்பு வகிக்கும் துறையில், பட்டியல் இன மாணவரின் அயலக உயர்கல்விக் கனவு சிதைக்கப்படுவது வேதனையின் உச்சம். சமூக நீதித்துறை அமைச்சருக்கு இந்த ஆட்சியில் கொஞ்சமாவது அதிகாரம் இருக்கிறதா? அல்லது சூப்பர் பவராக இயங்குபவர்கள்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார்களா?

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத்திட்டத்தில் மிக முக்கியமான இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. இங்கிலாந்தில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்கள், தமிழ்நாடு அரசு வழங்கும் இந்த உதவித்தொகைக்கான ஆவணங்களை அதிகாரப்பூர்வ நிதி ஆதாரமாக ஏற்றுக்கொள்ள மறுப்பதால் இந்த ஆண்டு வெளிநாடு செல்லவிருக்கும் 300க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி குறித்த எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த ஆண்டு பிரிட்டனில் படிக்க விண்ணப்பித்த 316 மாணவர்களின் விசா விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த சிக்கலைத் தீர்க்க, உடனடியாக பிரிட்டன் தூதரகத்துடனும், இங்கிலாந்து அரசுடனும் பேசக் கோரி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவசரக் கடிதம் எழுதியிருக்கிறார்.

எதிர்க் கட்சியாக இருந்தாலும் தி.மு.க. ஒன்றிய அரசிடமும் சம்மந்தப்பட்ட தூதரக அதிகாரி களிடமும் கடிதங்கள் எழுதி குரல் கொடுத்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? ஒன்றிய அரசிடம் இதுபற்றி பேசியதா? ஒன்றிய அரசுக்கு இதுதொடர்பாக சமூக நீதித் துறை அமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறாரா? விஜய் வாய் திறக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? அனைத்தை யும் மூடி மறைக்கும் பொம்மை அரசாக செயல்பட்டு கொண்டிருக்கிறது விஜய் அரசு.

சட்டமன்றத்தில் இந்த பிரச்சினையை தி.மு.க. உறுப்பினர் கோவி.செழியன் எழுப்பிய போது அதே பொய்யை சொல்லியிருக்கிறார் அமைச்சர் வன்னி அரசு. பிரச்சினையை தீர்ப்பதற்கு பதில், பழி தீர்க்கும் நோக்கம் மட்டுமே அவருடைய உரையில் வெளிப்பட்டிருக்கிறது.

பட்டியல் இனத்தவர்களின் உயர்கல்விக்காக சிறந்த நோக்கத்துடன் திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தை முடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவது போலவே விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்திய அளவில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்டியல் இன மாணவர் களுக்கான கல்வி நிதியுதவி கள் பலவற்றை நிறுத்தி யுள்ள நிலையில், பா.ஜ.க. வழியிலேயே தமிழ்நாட்டில் உள்ள த.வெ.க. கூட்டணி அரசும் செயல்படுகிறது.

தாங்கள் பதவியில் இருப்பதற்காக தலித் மாணவர்களின் உழைப்பையும், கனவையும் குழிதோண்டிப் புதைக்கும் இந்த #SofaModel அரசின் நாடகங்களை மக்கள் மன்றம் நிச்சயம் தண்டிக்கும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.